**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2009/2010 ஆம் ஆண்டிற்கான மேல் நீதிமன்ற யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1667 - 2010 අගෝස්තු මස 13 වැනි සිකුරාදා - 2010.08.13**

*1667 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1214 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1221 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பப்படிவங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, புரட்டாதி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆடி 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | குருநாகல் நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு, வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

8-230

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, புரட்டாதி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆடி 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாலிந்தநுவர | மகுரா பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பஸ்துன் கோரளை கிழக்கு பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை, பாணந்துறை, தொட்ட முனை (பாணந்துறை நகரம்) பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

8-358

---

## இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

பின்வரும் பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல் :-

**தகவல் தொழில்நுட்ப உதவியாளர்.- பதவி 1**

1. மேற்போந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தொடர்பில் இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.) கடந்த 5 வருட காலத்திற்குள் எதுவித ஒழுக்கக்கேடான ஒரு செயலுக்கும் தண்டனை பெற்றிராதல் வேண்டும்.

3. **கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ii) தொழில்நுட்ப/கணனிநுட்ப அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டம்/விசேட பட்டம் பெற்றிருத்தல் ;

4. **மேலதிக தகைமைகள் :**

(i) கணனி தொழில்நுட்ப/தகவல் தொழில்நுட்ப துறையில் பெற்றிருக்கும் தகைமைகள் ;

(ii) ஆங்கிலத்தில் வேலை செய்யமுடியுமாயிருப்பின் மேலதிக தகைமையாகும்.

5. **சம்பளத் தொகுதியும் அளவுத்திட்டமும் (வருடாந்தம்).**- ரூ. 1,82,580-4 x 2,880-7 x 3,840-15 x 4,320- ரூபா 3,11,580.
(அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 (iv) இன் எம்என்-4-2006 (A)

6. **ஆட்சேர்ப்பு முறை.**- தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் தகைமை பரிசீலனை செய்யப்பட்ட பின் நிரந்தர பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**- இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய, ஏ4 அளவிலான ஒரு தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்களை உரியவாறு பூர்த்தி செய்து 2010.08.30 ஆந் திகதிக்கு முன்னராக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தச்சுத் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான

ஆட்சேர்ப்பு'' என குறிப்பிடவும். தாமதமாகி கிடைக்கின்ற விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் தபாலில் நேரிடும் தாமதங்கள் தொடர்பில் வகைசொல்லப்பட மாட்டாது.

இறக்குமதிகள், ஏற்றுமதிகள்
கட்டுப்பாட்டாளர்.

இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத்
திணைக்களம்,
'ஹேமாஸ் கட்டிடம்',
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

.......................................................................................... பதவி
(பதவிப்பெயரைக் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (Mr./ Miss./ Mrs.) :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : ----.

1.3 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர வசிப்பிட முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

3. பிறந்த திகதி :----.

2010.07.30 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. பால் (ஆண்/பெண்) :----.

5. தற்போது அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ ஈடுபட்டிருப்பவராயின் :-

(அ) பதவிப் பெயர் :----.
(ஆ) தரமும் வகுப்பும் :----.
(இ) சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? :----.
(ஈ) அமைச்சு :----.
(உ) திணைக்களம் :----.

6. கல்வித் தகைமைகள் :-

(அ) பட்டப் படிப்பின் பெயர் :----.
(ஆ) வகுப்பு :----.
(இ) பட்டம் பெற்ற நிறுவனம் :----.
(ஈ) வருடம் :----.

7. மேலதிக தகைமைகள் :-

(1) ..................................................................................
(2) ..................................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் எவையேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என தெரியவருமாயின் மேற்படி பதவிக்காக எவ்விதத்திலும் தகைமை பெறமாட்டேன் என்பதனை நான் அறிவேன். அவ்வாறே சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தாலும் இதில் ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என நிரூபனமானால், எவ்வித நட்டஈடுமின்றி உடனடியாக பதவி நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்று நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரர் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவரெனில் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேற்போந்த அலுவலரினால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும் அவர் ---- ஆந் திகதி தொடக்கம் ------- பதவியில் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் என சான்றுப்படுத்துவதுடன் அவர் கடந்த மூன்று வருட காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் அவருக்கெதிராக அவ்வாறு செய்யும் நோக்கம் இல்லை எனவும், இப்பதவிக்கு தெரிவுசெய்யப் பட்டால், தற்போது அவர் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

8-159

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (தமிழ்/ ஆங்கிலம்)
தலைமை (கணனி) இயக்குநர் பதவி

இலங்கை அச்சிடல் சேவை - வகுப்பு III, தரம் III ஐச் சேர்ந்த 'கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (தமிழ்/ ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவியின் பொருட்டு இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2010, செத்தெம்பர் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், (அஞ்சல் பெட்டி 507), இல. 118, டாக்டர் டெனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 8" என்னும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (தமிழ்/ ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவி" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு** :- (அ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அல்லது அது தொடர்பான ஆவணங்களை அரசாங்க அழுத்தகரைத் தவிர வேறு எந்த அலுவலர் பெயருக்கும் அனுப்பி வைத்தலாகாது ;

(ஆ) விண்ணப்பப்படிவத்தை அல்லது அது தொடர்பான ஆவணங்களை அஞ்சலில் அனுப்புகையில் தொலைந்து போதல் அல்லது தாமதம் தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(இ) தற்போது அரசாங்க அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ளோர் தமது விண்ணப்பப் படிவங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பளத் திட்டம்**.-(அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6/2006-IV க்கு ஏற்ப) ரூபா 14,910 - 10 x 170 - 11 x 180 - 6 x 240 - 14 x 320 - ரூபா 24,510 ஆகும்.

3. **வயதெல்லை**.-விண்ணப்பாரிகள் 2010.09.13 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதுமிருத்தல் வேண்டும்.

(**கவனிக்க**.- தற்போது அரசாங்க சேவையில் இருப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது).

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

(அ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் மொழி/ ஆங்கிலமொழி, கணிதம்/ எண்எணிதம் உட்பட ஆறு பாடங்களில் ஐந்து திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் தமிழ் மொழி/ ஆங்கில மொழி பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

(இ) தமிழ்/ ஆங்கில மொழிப் பாடங்கள் தொடர்பில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து, அப்பாடங்கள் தொடர்பில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இத்திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கு தோற்றுமாறு அழைக்கப்படுவர். இப்பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் மட்டும் கவனத்திற்கொள்ளப்படுவர். அத்துடன் சித்திபெறுவதற்கு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

5. **சேவையில் நியமிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்**.-இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள், ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

6. **பொதுவான நிபந்தனைகள்**.-தாபனக் கோவை - அத்தியாயம் II இன் 12-1 மற்றும் 12:6 தொடக்கம் 12.12 வரையான பிரிவுகள் ஏற்புடையதாகும்.

7. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.-விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தகுதியானவர்கள் சேவைக்கு தெரிவு செய்யப்படுவர். சேவைக்கு சேர்த்து கொள்ளப்பட்டபின்னர் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
(அஞ்சல் பெட்டி 507),
இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 08,
2010.08.13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்துக்கு)

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான
(தமிழ்/ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி) ----.

(ii) முழுப் பெயர் : -----.

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : -----.

2. (i) நிரந்தர முகவரி: --.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): --.

* (அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)

3. பால் (ஆண்/பெண்) : -----.

4. திருமணமானவரா /திருமணமாகாதவரா ? : -----.

5. (i) நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? : -----.

(ii) தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.

6. (i) பிறந்த திகதி : -
ஆண்டு : -----, மாதம் : -----, திகதி : -----.

(ii) 2010.09.13 ஆந் திகதியன்று வயது: -
வருடங்கள் : -----, மாதங்கள் : -----, நாட்கள் : -----.

7. (i) கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை

| பாடங்கள் | சித்தித் தரம் | பாடங்கள் | சித்தித் தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை

| பாடங்கள் | சித்தித் தரம் | பாடங்கள் | சித்தித் தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

8. ஏனைய தகைமைகள் :-----.

9. நீர் தண்டனைக்குரிய குற்றமேதும் புரிந்துள்ளீரா ? அல்லது ஏதேனும் நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளீரா ? :-----.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென உறுதியுரைக் கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பொய்யானவை அல்லது பிழையானவை என நியமிக்கப்பட்ட பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால், சேவைக்குத் தகுதியற்றவராக கருதப்படுவதுடன், நட்டஈடு ஏதுமின்றி சேவையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க/உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடைத்தானது)

இந்த விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கும் ......................... எனும் பெயருடைய விண்ணப்பதாரி..................... திகதி தொடக்கம் இவ் அலுவலகத்தில் கடமையாற்றுகிறார் எனவும், அவரது சேவை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை எனவும், இவ் அறிவித்தலில் வேண்டப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போது கடமையாற்றும் பதவியினின்றும் அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

திகதி : -----.

8-259

---

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (சிங்களம்/ஆங்கிலம்)
தலைமை (கணனி) இயக்குநர் பதவி

இலங்கை அச்சிடல் சேவை - வகுப்பு III, தரம் III ஐச் சேர்ந்த ‘கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (சிங்களம்/ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவியின் பொருட்டு இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2010, செத்தெம்பர் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், (அஞ்சல் பெட்டி 507), இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 8” என்னும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான (சிங்களம்/ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவி’’ என குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு** :- (அ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அல்லது அது தொடர்பான ஆவணங்களை அரசாங்க அழுத்தகரைத் தவிர வேறு எந்த அலுவலர் பெயருக்கும் அனுப்பி வைத்தலாகாது ;

(ஆ) விண்ணப்பப்படிவத்தை அல்லது அது தொடர்பான ஆவணங்களை அஞ்சலில் அனுப்புகையில் தொலைந்து போதல் அல்லது தாமதம் தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(இ) தற்போது அரசாங்க அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ளோர் தமது விண்ணபப்படிவங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பளத் திட்டம்**.-(அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6/2006-IV க்கு ஏற்ப) ரூபா 14,910 - 10 x 170 - 11 x 180 - 6 x 240 - 14 x 320 - ரூபா 24,510 ஆகும்.

3. **வயதெல்லை**.-விண்ணப்பாரிகள் 2010.09.13 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதுமிருத்தல் வேண்டும்.

(**கவனிக்க**.- தற்போது அரசாங்க சேவையில் இருப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது).

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

(அ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் மொழி/ ஆங்கில மொழி, கணிதம்/எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் ஐந்து திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் சிங்கள மொழி/ஆங்கில மொழி பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

(இ) சிங்களம்/ஆங்கில மொழிப் பாடங்கள் தொடர்பில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து, அப்பாடங்கள் தொடர்பில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இத்திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கு தோற்றுமாறு அழைக்கப்படுவர். இப்பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் மட்டும் கவனத்திற்கொள்ளப்படுவர். அத்துடன் சித்திபெறுவதற்கு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

5. **சேவையில் நியமிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்**.-இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள், ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

6. **பொதுவான நிபந்தனைகள்**.-தாபனக் கோவை - அத்தியாயம் II இன் 12-1 மற்றும் 12:6 தொடக்கம் 12.12 வரையான பிரிவுகள் ஏற்புடையதாகும்.

7. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.-விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தகுதியானவர்கள் சேவைக்கு தெரிவு செய்யப்படுவர். சேவைக்கு சேர்த்து கொள்ளப்பட்டபின்னர் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
(அஞ்சல் பெட்டி 507),
இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 08,
2010, ஓகத்து 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு)

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

கணனிமய தட்டச்சிடல் மற்றும் பதிப்பித்தலுக்கான
(சிங்களம்/ஆங்கிலம்) தலைமை (கணனி) இயக்குநர் பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ----.

(ii) முழுப் பெயர் : -----.

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : -----.

2. (i) நிரந்தர முகவரி: --.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): --.

* (அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)

3. பால் (ஆண்/பெண்) : -----.

4. திருமணமானவரா /திருமணமாகாதவரா ? : -----.

5. (i) நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? : -----.

(ii) தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.

6. (i) பிறந்த திகதி : -
ஆண்டு : -----, மாதம் : -----, திகதி : -----.

(ii) 2010, செத்தெம்பர் 13 ஆந் திகதியன்று வயது: -
வருடங்கள் : -----, மாதங்கள் : -----, நாட்கள் : -----.

7. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை

| பாடங்கள் | சித்தித் தரம் | பாடங்கள் | சித்தித் தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை

| பாடங்கள் | சித்தித் தரம் | பாடங்கள் | சித்தித் தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

8. ஏனைய தகைமைகள் :-----.

9. நீர் தண்டனைக்குரிய குற்றமேதும் புரிந்துள்ளீரா ? அல்லது ஏதேனும் நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக் கப்பட்டுள்ளீரா ? :-----.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென உறுதியுரைக் கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பொய்யானவை அல்லது பிழையானவை என நியமிக்கப்பட்ட பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால், சேவைக்குத் தகுதியற்றவராக கருதப்படுவதுடன், நட்டஈடு ஏதுமின்றி சேவையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க/உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடைத்தானது)

இந்த விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கும் ......................... எனும் பெயருடைய விண்ணப்பதாரி..................... திகதி தொடக்கம் இவ் அலுவலகத்தில் கடமையாற்றுகிறார் எனவும், அவரது சேவை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை எனவும், இவ் அறிவித்தலில் வேண்டப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போது கடமையாற்றும் பதவியினின்றும் அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

திகதி : -----.

8-258

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - ஹம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பப்படிவங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, புரட்டாதி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆடி 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை நகரப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், ஹம்பாந்தோட்டை |

8-304

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு

இலங்கை சிறைச்சாலைத் திணைக்களம்

### உதவி சிறைச்சாலை கண்காணிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

OPEN EXAMINATION FOR THE RECRUITMENT OF ASSISTANT SUPERINTDENT OF PRISONS IN SRI LANKA - 2010

சிறைச்சாலைத் திணைக்களத்தின் உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் பதவிக்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2010.09.09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இத்திறந்த போட்டிப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானது என செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதி நாள்வரை விண்ணப்பங்களை அனுப்ப தாமதம் செய்வதனால் ஏற்படும் நட்டங்கள் யாவும் விண்ணப்பதாரர்களாலேயே ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. **சேவை நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியவுரித்துடையதுமாகும். 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தி இப்பதவிக்கு நியமிக்கப்படும். தெரிவுசெய்யப்படுகின்ற அலுவலர்கள் தீவு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு மறியற்சாலை நிறுவனத்திலும் சேவை செய்ய வேண்டுமென்பதுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற மறியற்சாலை நிறுவனத்தில் அலுவலக வாசஸ்தல வசதிகள் இருப்பின் கட்டாயமாக அங்கே குடியிருக்க வேண்டும்.

3. **சம்பளங்களும் படிகளும்**.- சம்பள குறியீடு இல. : எஸ்எல்-1-2006 (ஆரம்ப படிநிலை)

**சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 22,935-10 x 645-8-790-17 x 1,050-ரூபா 53,555

பதவியில் நியமனம்பெற்று 3 வருட காலத்துக்குள் வினைத்திறமைத் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4. **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளவர் என்பதற்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) கல்வித் தகைமைகள் :

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி ஒருவராக அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல் வேண்டும்.

(2) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) உடற் தகைமைகள் :

(1) ஆகக்குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலமாகவும் ;

(2) மார்பு மூச்சுப்பிடிக்காமல் 32 அங்குலமாகவும் இருத்தல் வேண்டும் ;

(3) சிறந்த தேகாரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) வயது.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. பின்வரும் ஆவணங்களில் எவையாவது அல்லது அனைத்தையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது அவற்றின் மூலப் பிரதிகள் அபேட்சகர்களால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.- சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) ;

(ஆ) பெறப்பட்டுள்ள அதிஉயர் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் ;

(இ) இரண்டு குணநல சான்றிதழ்கள் (அதிலொன்று கல்வி அலுவல்கள் பற்றிய பணிப்பாளரிடமிருந்து அல்லது பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிட மிருந்து பெறப்பட்டதாக வேண்டும்.)

(ஈ) தொழில்சார் மற்றும்/அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) ஆங்கில மொழியில் சித்தியடைந்த அதிஉயர் பரீட்சை பற்றிய சான்றிதழ் ;

(ஊ) பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

**கவனிக்க வேண்டியவை**.- (1) விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்கள் எதுவும் அல்லது அவற்றின் பிரதிகள் எதுவும் இணைக்கப் படலாகாது.

(2) கோரப்படும்போது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- பந்தி 4 இன் தகைமைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் எழுத்துமூல பரீட்சையொன்றுக்கும், வாய்மூல/ நேர்முகப் பரீட்சையொன்றுக்கும் உட்படுத்தப்பட்டு, அதன் பெறுபேறுகளின் மீது ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். இதற்காக நடைபெறும் எழுத்துப் பரீட்சைக்கு 200 புள்ளிகள் வழங்கப்படுவதுடன், வாய்மூல/ நேர்முகப் பரீட்சையின்போது விளையாட்டுத் திறமைகள், ஆளுமை, தலைமைத் துவம் மற்றும் சம்பந்தப்பட்ட பிற தகைமைகளுக்காக 100 புள்ளிகள் வழங்கப்படும். (எழுத்துமூலப் பரீட்சையின் ஒவ்வொரு விடயத்திலும் தகைமைகளைப் பெறுவதற்காக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். எழுத்துமூலப் பரீட்சையில் மேலான தகைமைகளைப் பெற்றவர்களில் உளதாம் வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட ஐந்து மடங்கு விண்ணப்ப தாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்).

7. **பரீட்சை முறை** :

7.1 எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முக வாய்மூல பரீட்சை என பரீட்சை முறை இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

7.1.1 பரீட்சார்த்திகளுக்கான எழுத்துமூலப் பரீட்சை இரு வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான காலம் அதன் எதிரே காட்டப்பட்டுள்ளது :-

| | வினாப்பத்திரம் | உரிய காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (அ) | நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் பொது அறிவு (பகுதி I - நுண்ணறிவுப் பரீட்சை | 45 நிமிடங்கள் | 50 |
| | நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் பொது அறிவு (பகுதி II - பொது அறிவு) | 45 நிமிடங்கள் | 50 |
| (ஆ) | ஆய்வு | 02 மணித்தியாலங்கள் | 100 |

7.1.2 வாய்மூல/நேர்முகப் பரீட்சை.- வாய்மூலப் பரீட்சைக்காக 100 புள்ளிகள்

7.2 பரீட்சை மொழிமூலம் :

7.2.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7.2.2 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகப் பட்டத்தில் சித்தியடைந்த மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

7.2.3 பல்கலைக்கழக பட்டப் பரீட்சையில் ஒரு மொழி மூலத்துக்கு மேற்பட்ட மொழிமூலங்களில் பாடங்களில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகள் பட்டப் பரீட்சையில் கூடுதலான பாடங்களில் சித்தியடைந்துள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

7.2.4 பிரதான பாடம் ஒரு மொழி மூலத்திலும் மேலதிக பாடங்களை மற்றுமொரு மொழிமூலத்திலும் சித்தி யடைந்துள்ள விசேட பட்டங்களைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தமது பிரதான பாடத்தில் சித்தியடைந் துள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

7.2.5 பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே விடை எழுத வேண்டும்.

7.2.6 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளுக்குப் பின்னர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது

7.3 பாடத்திட்டம் :

(அ) நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் பொது அறிவு.- பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியான கருத்து, அவரின் கருத்துப் பகுப்பாய்வுத் தன்மை, சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலை அளவிடும் வகையிலான வினாக் களில் நுண்ணறிவுப் பரீட்சையும் பரீட்சார்த்திகள் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழ்நிலை, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமாகின்ற நூதன

விடயங்கள் அத்துடன் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்தி பற்றிய அறிவை பரீட்சித்துப் பார்ப்பதற்கான பொது அறிவு வினாக்களும் உட்பட, இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களும் சிறு விடைகளுக்கான வினாக்களும் கொண்டுள்ளன.

(ஆ) *ஆய்வு.-* ஆளணி நிருவாகம், நிறுவன முகாமைத் துவம், நலன்புரி அலுவல்கள், கமத்தொழில் அலுவல்கள், புனர்வாழ்வு அலுவல்கள் மற்றும் சிறுகைத்தொழில் உற்பத்தி அலுவல்கள் பற்றி நான்கு வினாக்களைக் கொண்ட ஆய்வு வினாப்பத்திர மொன்றுக்கு விடையளிக்க வேண்டும்.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பத்தின் தலைப்பு இல. 1 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் 07 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 3 மற்றும் 4 ஆம் பக்கங்களிலும் உள்ளடங்குகின்றவாறு தயார் செய்யப்பட வேண்டுமென்பதுடன், அதற்கான தகவல்கள் தமது கையெழுத்தினாலேயே தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்களும், சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப் பப்படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதென தயவுசெய்து கருத்திற் கொள்ளவும். மேலும் பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டு மென்பதுடன், அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவித்துக்கொள் கின்றேன். விண்ணப்பத்தை தயார்செய்யும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

8.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் (ஏற்பாட்டு, வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''உதவி மறியற்சாலைக் கண்காணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010'' எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

8.3 ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர்களினூடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளுக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8.4 விண்ணப்பங்கள் சகல விதத்திலும் பூர்த்தியாக இருத்தல் வேண்டும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக ரூ. 400 (நானூறு) தொகையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்டச் செயலகத்திலும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்படு கின்ற பற்றுச்சீட்டை உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை எதிர்கால பயனுக்காக தன்வசம் வைத்துக்கொள்ளவும்) எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப் படாததுடன், காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. **பரீட்சைக்கு அனுமதித்தல் :-**

10.1 கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின்படி அந்தந்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்ப தாரர்களால் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

10.2 விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப் பட்டதும் அதுபற்றி பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தன்வசம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளும் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்புக்குத் தொலைவிலுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்க மொன்றுடனான உங்களது விண்ணப்பக் கடிதத்தையும் தன்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

10.3 பரீட்சைக்கு அனுமதித்துக்கொள்ளல் தகைமைகளை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

11.1 தற்போது அரசாங்க சேவையிலுள்ளவர்களின் கையொப்பம் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் அல்லது அவரின் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

11.2 விண்ணப்பதாரர்களின் கையொப்பம் அதிகாரம்பெற்ற ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது, அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,76,220 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த சம்பள உயர்வு ரூபா 7,740 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை சம்பள உயர்வாகப் பெறும் அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக் கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப் படுதல் வேண்டும். அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றும் அலுவலர் விடயத்தில் உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

12. **அடையாள அட்டை.**- விண்ணப்பதாரர்கள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. விண்ணப்பதாரர் ஒருவரின் விண்ணப்பத்தில் பொய்யான தகவல்கள் உள்ளதென அவரை தெரிவுசெய்துகொள்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து அதன் காரணமாக அவர் தகுதியற்றவராக ஆக்குவதற்கும் தெரிவுசெய்துகொண்ட பின்னர் அது தெரியவருமிடத்து அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவார்.

14. இவ்வறிவித்தலால் ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ள வேறு ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின்படி தீர்மானிக்கப்படுகிறது.

15. விண்ணப்பதாரர் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பரீட்சை சட்டதிட்டங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

செயலாளர்,
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை
மறுசீரமைப்பு அமைச்சு.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை,
மறுசீரமைப்பு அமைச்சு,
கொழும்பு 8.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு**

*சிறைச்சாலைத் திணைக்களம்*

உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2010

OPEN EXAMINATION FOR THE RECRUITMENT OF ASSISTANT SUPERINTENDENT OF PRISONS IN SRI LANKA - 2010

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ----.
   1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) : ----.

2. முகவரி :
   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   2.2 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :----.
   2.3 அலுவலக முகவரி :----.

3. இனத்தொகுதி :

சிங்களம் - 1
இலங்கைத் தமிழ் - 2
இந்திய தமிழ் - 3
முஸ்லிம் - 4
மலாய் - 5
பறங்கியர் - 6
பிற - 7

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

4. திருமணமானவரா/திருமணமாகாதவரா ?

திருமணமானவர் -1
திருமணமாகாதவர் -2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

5. தேசிய அடையாள அட்டை இல. :

6. இலங்கைப் பிரசையா என்பது :
அவ்வாறாயின் பரம்பரையினாலா, பதிவினாலா ? என்பதைக் குறிப்பிடுக :----.

7. வயது :
   7.1 பிறந்த திகதி :

ஆண்டு   மாதம்   திகதி

   7.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு வயது :

வருடங்கள்   மாதங்கள்   நாட்கள்

8. தகைமைகள் :
   8.1 கல்வித் தகைமைகள்.- (பெறப்பட்ட எல்லாப் பட்டங்கள், திறமைச் சித்திகள், தொழில் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் விபரங்கள், வகுப்பு ஒன்று இருப்பின், அப்பாடங்கள், நிறுவனம் என்பவற்றைக் குறிப்பிடுக) :----.

| பரீட்சை/பட்டம் | ஆண்டு | பாடங்கள் | நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |

   8.2 தொழிற்தகைமைகள் : ......................................................
........................................................................................
........................................................................................
........................................................................................

9. சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சை :----.

(1) சிங்களம் :----.
(2) தமிழ் :----.
(3) ஆங்கிலம் :----.

10. பாடசாலையை விட்டு விலகிய பின்னர் செய்த தொழில்கள் மற்றும்/ அல்லது பெறப்பட்ட பயிற்சி பற்றிய விபரம் (சேவையை கையேற்ற, விலகிய திகதிகள் மற்றும் விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும் ........................................................
...............................................................................................
...............................................................................................
...............................................................................................
...............................................................................................
...............................................................................................

11. தற்போது வகிக்கும் பதவியின் விபரம் :

(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/அமைச்சு :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) நிரந்தர/ ஓய்வூதியமுடைய/ ஓய்வூதியமற்ற/ தற்காலிக மானதா என்பது :----.
(உ) பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா என்பது :----.
(ஊ) பதவியின் சம்பள அளவுத்திட்டமும் தற்போதைய சம்பளமும் : ----.

12. ஏதேனுமொரு குற்றவியல் தவறொன்றுக்காக நீதிமன்றத்தில் தவறாளராக்கப்பட்டிருப்பின் அத்தவறு மற்றும் பெற்ற தண்டனை யைக் குறிப்பிடவும் :...............................................................
...............................................................................................
...............................................................................................

13. நற்சான்றிதழ்களை வழங்கிய ஆட்களின் பெயர்கள், பதவி மற்றும் முகவரி :...................................................................................
...............................................................................................
...............................................................................................
...............................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

| |
|---|
| |

(i) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
(ii) திகதி :----.
(iii) மாவட்ட/பிரதேச செயலகம் :----.
(iv) தொகை :----.

15. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகிறேன். இதில் உள்ள எவையேனும் ஒரு தகவல் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதியற்றவன் ஆவேன் எனவும் இப்பதவிக்கு என்னை நியமித்துக்கொண்டதன் பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி நான் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்றும் அறிவேன், மேலும் பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டவிதிகளுக்கு நான் உட்படுவேன் எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

16. *விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-* இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு. ................................ என்பவரை நான் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், பற்றுச்சீட்டு ஒட்டப்பட் டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

17. **விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு. ............................. என்பவர் இத்திணைக்களத்தில்/ அமைச்சில்/ அலுவலகத்தில் சேவை செய்கின்றார் என்றும், மேலே 11 ஆம் பந்தியில் உள்ள விபரங்கள் சரியானவை என்றும்/ பின்வருமாறு திருத்தஞ் செய்யப்பட வேண்டும் என்றும், அவரது வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும் நான் சான்றுப்படுத்து கின்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி
(அலுவலக முத்திரை).

திகதி :----.

8-187

---

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இலங்கை சமூர்த்தி அதிகாரசபை

### I/II ஆம் தர சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009

இலங்கை சமூர்த்தி அதிகாரசபையின் I/II தர சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நாட்டின் சகல மாவட்டங் களினது பிரதான நகரங்களில் 2010, நவெம்பர் மாதத்தில் நடாத்தப் படும். (மாவட்டங்களுக்குரிய இலக்கத்தினை உப அட்டவணையில் பார்க்கவும்.)

2. **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ்குறிப்பிடப்படும் பாடத்திட்டங்களைக் கொண்டதாகும் :-

(அ) தாபன மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்) ;

(ஆ) சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய அறிவு - (2 மணித்தியாலங்கள்).

**குறிப்பு**.- (அ) சகல பாடங்களுக்கும் ஒரே தடவையிலோ அல்லது பல தடவைகளிலோ அமருவதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு அனுமதியுண்டு.

(ஆ) வினாத்தாள்களுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் 1 ஆம் தர உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வினாத்தாளிலும் சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெறவேண்டியதுடன் II ஆம் தர சகல உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் II ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் பிற்காலத்தில் 1 ஆம் தர நியமனத்தினைப் பெற்றால் அவர் அத்தடை தாண்டல் பரீட்சையில் தேற வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படும்.

(இ)மேற்குறிப்பிடப்பட்ட ''தாபன மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள்'' வினாத்தாளானது இரு பகுதிகளைக் கொண்டதாகும். விண்ணப்பதாரிகள் இவ்விரு பகுதிகளுக்கும் தனித்தனியாக விடையளித்தல் வேண்டும்.

2.1 தாபனம் மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள் பற்றிய அறிவு.- இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டதாகும். இதில் முதலாவது வினா பல்தேர்வு அல்லது சிறிய வினாக்களைக் கொண்டதுடன் இப்பிரிவில் சகல வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும். (புள்ளிகள் 60). இரண்டாம் பகுதி கட்டுரை அல்லது பந்தியளவிலான நான்கு வினாக்களைக் கொண்டிருப்பதுடன் இரு வினாக்களை மட்டும் தெரிவுசெய்து விடையளிக்க வேண்டும். (புள்ளிகள் 40).

வினாத்தாள்களுக்கு வழங்கப்படும் காலமானது இரண்டு மணித்தியாலங்களாகும். தாபனக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக் கோவை சார்ந்ததாக கீழ்குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும் :-

(i) ஊழியர்களை நியமிப்பதற்கான குறித்த நிபந்தனைகள் ;
(ii) ஊழியர்களை இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு செய்தல் மற்றும் இளைப்பாறச் செய்யும் விதிமுறைகள்
(iii) விடுமுறைகள்
(iv) சம்பள உயர்வு (அதிகரிப்பு)
(v) வினைத்திறன் தடைதாண்டல்கள்
(vi) பிரயாணச் செலவுக் கொடுப்பனவு
(vii) கடமைப்பட்டியல்
(viii) கடமை தினக்குறிப்பேடு
(ix) முன்வேலைத்திட்டங்கள்
(x) அலுவலக முகாமைத்துவம்
(xi) மக்கள் தொடர்புகளும் தொடர்பாடலும்
(xii) தொழிற்சங்கங்களும் அரசியல் உரிமைகளும்
(xiii) கொடுப்பனவுச் செயற்பாடுகள்
(xiv) நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல்
(xv) கேள்விப்பத்திர நடைமுறைகள் (தேடி வழங்கல் நடைமுறைகள்)
(xvi) கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல்
(xvii) பொருட் பட்டோலைப் பராமரிப்பு (இன்வென்ட்ரீ பராமரிப்பு)
(xviii) பொருள் இருப்பு மதிப்பீட்டு நடவடிக்கைகள்
(xix) வங்கிக் கணக்குகளைப் பராமரித்தல்
(xx) கணக்காய்வுச் செயற்பாடுகள்
(xxi) இழப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(xxii) பொது மக்களின் நிதிப்பயன்பாடு
(xxiii) அரச உடைமைகளைப் பாதுகாத்தல்
(xxiv) ஒப்பந்த நடவடிக்கைகள்
(xxv) ஊழியர் நம்பிக்கை நிதியம்
(xxvi) ஊழியர் சேமலாப நிதியம்

2.2 சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய விடய அறிவு.- இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதிக்கு கட்டாயம் விடையளிக்க வேண்டுமென்பதுடன், இப்பகுதியானது பல்தேர்வு அல்லது சிறிய வினாக்களைக் கொண்டதாகும். இதற்கான புள்ளிகள் 60 ஆகும். இரண்டாவது பகுதியானது பந்தியமைப்பில் அமைந்த கட்டுரை வடிவிலான வினாக்களாக அமைவதுடன் விடய அறிவு (case study) பற்றிய வினாவையும் உள்ளடக்கியிருக்கும். பரீட்சார்த்திகளுக்கு தெரிவுசெய்துகொள்வதற்கு ஏற்ற வகையிலான ஒருசில வினாக்கள் இப்பகுதியில் உள்ளடங்குவதுடன் இரு வினாக்களுக்கு மாத்திரம் பதிலளித்தல் வேண்டும். - (40 புள்ளிகள்). வினாத்தாளுக்கான குறித்த காலமானது 02 மணித்தியாலங்களாகும்.

(i) வறுமை ஒழிப்பும் கமநெகும வேலைத்திட்டமும்

(ii) சமுர்த்தி இயக்கத்தின் புதிய போக்கு

* நோக்கு
* பணி
* குறிக்கோள்கள்
* வறுமையினை ஒழிக்கும் பல்வேறு மட்டத்திலான திட்டமிடல்கள்
* குடும்ப அபிவிருத்தி திட்டமிடல்
* செயற்றிறன் மதிப்பீடு
* அரசியல் கலப்படமில்லாததாக ஆக்குதல்

(iii) சமுர்த்தி இயக்கத்தின்கீழ் மக்கள் அமைப்புக்களைக் கட்டியெழுப்புதல்

* சமுர்த்தி செயலணி
* சிறு குழுக்கள்
* சமுர்த்திச் சங்கம்
* சமுர்த்தி வங்கிச் சங்கம்
* சமுர்த்தி மகா சங்கம்

(iv) சமூக வலுவூட்டல் செயற்பாடுகள்
(v) பங்கேற்பு அபிவிருத்தி மக்கள் கருத்திட்டங்களும், கிராம அபிவிருத்தியும்
(vi) வங்கி நிதி நடவடிக்கைகள்
(vii) பல்வேறு கடன் நிகழ்ச்சித்திட்டங்கள்
(viii) சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
(ix) சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
(x) வருமானமீட்டும் நிகழ்ச்சித்திட்டம்

* விவசாயம்
* கால்நடை உற்பத்திகள் மற்றும் மீன்பிடி
* கைத்தொழில்
* சந்தைப்படுத்தல்

(xi) இலகுவான கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல்
(xii) முன்னேற்ற மதிப்பீடு
(xiii) நிவாரண வேலைத்திட்டம்
(xiv) இலங்கையின் அபிவிருத்தி அனுபவங்கள்
(xv) திட்டமிடலின் கோட்பாடுகள்

3. இப்பரீட்சையானது, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாளின் இருபக்கங்களில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 3.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப் படுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் உட்படுத்துதல் வேண்டும். அவ்வாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாகவோ அல்லது மாவட்டச் செயலாளர்/மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் அல்லது பிரதேச செயலாளர்கள் /பிரதி சமூர்த்திப் பணிப்பாளர்கள் ஊடாக 2010.09.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமூர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்துவைத்து இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

7. **பரீட்சைக் கட்டணங்கள்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும் :

| | பரீட்சைக் கட்டணம் | ரூபா ச. |
|---|---|---|
| (அ) | முதலாம் தடவையின் பொருட்டு கட்டணம் அறவிடப்பட மாட்டாது | |
| (ஆ) | முதலாம் தடவையின் பின்னர் முழுப்பரீட் சைக்கும் | - 250 0 |
| (இ) | ஒரு விடயத்திற்கு | - 125 0 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-20-13 ஆம் இலக்கத்தினை யுடைய வருமானத் தலைப்பில் வரவிடப்படுகின்றவாறு நாட்டின் எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகம் ஒன்றிலிருந்தும் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை கழறாதவாறு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்பப்படல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை தன்னகத்தே வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

8. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டிவரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவன்/அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

9. இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. தற்போது நடைமுறையிலுள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு முறைகளுக்கேற்ப இப்பரீட்சை நடைபெறும் என்பதுடன் இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பந்துல திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, "செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

சுட்டெண்

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபை**

*சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான I/II ஆம் தர வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009*

உரிய தரம்-

I ஆவது தரம்-1
II ஆவது தரம்-2
(குறித்த இலக்கத்தினை உரிய கூட்டினுள் எழுதவும்.)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டம், மாவட்ட இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-
சிங்களம் - 2, தமிழ் - 3
(குறித்த இலக்கத்தினை உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
(உதா.: SILVA, A. B.)

1.2 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2.1 அலுவலக முகவரி :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3. பால் (பெண்/ஆண்) :-

3.1 பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா :-
விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு :   மாதம் :   திகதி :

3.4 தேசிய அடையாள அட்டை இல.:-

4. இப்பரீட்சையில் தோற்றும் பாடங்கள் :-
தாபன மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் - 1
சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புள்ள அறிவு - 2
இரண்டு விடயங்களும் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையல்லாவிடின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா :-----.

முழுப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 250 ஆகும். ஒரு விடயத்திற்கு எனின் 125 ஆகும்.

பற்றுச்சீட்டினை ஒட்டும் பொருட்டு

6. தற்போது வகிக்கும் பதவியும் தரமும் :-----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழி மூலம் அப்பரீட்சையில் தோற்றுவதற்கு உரித்துள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும், குறித்த கட்டணத்தினைச் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவிப் பெயரும்.

திகதி :-----.

**மாவட்ட பெயர்ப்பட்டியல் மற்றும் இலக்கம்**

| *மாவட்டம்* | *இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தறை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகலை | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

8-296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.